**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S.33/2021**
**நாள்.15.06.2025**
**வா.சா. 1 - நடராஜன்**
**த/பெ - காமாட்சி ஆசாரி**
**இடை மனு எண். 2/2026 நாள் 15.06.2026ம் தேதியில் ஏற்பட்ட உத்தரவின்பேரில் சாட்சிக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு வா.சா.1 ஆக பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் தமிழ்நாடு மின்சாரத்துறையில் Revenue Suprevisor ஆக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன்.

2. சர்வே எண்.293/3, 293/2, 293/4B1, 293/8 ஆகியவற்றிற்கு கட்டுப்பட்ட நிலங்கள் எனக்கு சொந்தமானவை என்றால் சர்வே எண்.293/2 தவிர இதர சர்வே எண்களுக்கு கட்டுப்பட்ட நிலங்கள் எனக்கு சொந்தமானவை.

3. எனக்கு வயது தற்போது 78 ஆகிறது. நான் Revenue Suprevisor ஆக இறுதியாக வடமதுரையில் பணியாற்றியதற்கு ஆதரவாக அதற்குரிய ஆவணத்தை தயாராக உள்ளேனா என்றால் தேடிப்பார்த்து கொடுக்கமுடியும்.

4. சர்வே எண்.293/7க்கு தெற்கே சர்வே எண்.294ம், வடக்கே சர்வே எண்.293/3, 293/4B, 293/8 ஆகியவை உள்ளன.

5. என்னுடைய நிலத்திற்கு அருகே உள்ள நிலங்களின் புலப்படங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் தேவையில்லை என்பதால் நான் பார்த்ததில்லை. அப்படியெனில் எனக்கு பாத்தியப்பட்ட நிலங்களுக்கான புலப்படத்தை பார்த்துள்ளேன் என்றால் சரிதான்.

6. தாவா சொத்துவிவரத்தில் சுமார் 200 அடி நீளம் என்றும், சுமார் 20 அடி அகலம் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் தோராயமாக தான் அளவுகளை குறிப்பிட்டுள்ளேன் ஒழிய துல்லியமாக அளவுகள் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் சர்வே எண்.294ல் 200 அடி நீளம் மற்றும் 20 அடி அகலம் உள்ளது என்று குறிப்பிட்டு எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான்

8. நான் சொத்து கிரையம் வாங்கும்போது அந்த ஆவணத்திற்குரிய உரிமை மூல ஆவணங்களையும், வில்லங்ககளையும் சரிபார்த்து வாங்கினேன் என்றால் சரிதான்.

9. சர்வே எண்.275, 285 கட்டுப்பட்ட நிலங்கள் என்னுடைய நிலத்திற்கு கிழக்க பக்கம் உள்ளன என்றால் எனக்கு தெரியாது.

10. என்னுடைய இடத்திற்கும், நான் பாதையாக குறிப்பிட்டுள்ள இடத்திற்கும் நான்குமால் தெரியாது என்றால் சரிதான்.

11. சர்வே எண்.293/7 ல் நான் கட்டியுள்ள வீட்டை 2016 ம் ஆண்டு கட்டினேன் என்றால் கட்டியிருக்கலாம். 2016 க்கு முன்பு நான் குடியிருந்த வீடு எந்த சர்வே எண்ணின் கீழ் இருந்தது என்றால் சர்வே எண்.285 ல் இருந்திருக்கலாம்.

12. சர்வே எண்.285/2B க்கு சர்வே எண்.294 ல் குறிப்பிட்டுள்ள பாதையை தான் நான் காலம்காலமாக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

13. நான் சர்வே எண்.293/7 ல் உள்ள நிலத்தை 1991 ம் ஆண்டு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். சர்வே எண்.294 ல் குறிப்பிட்டுள்ள பாதை சர்வே எண்.293/7 ல் இல்லை என்றால் சரியல்ல.

14. எனது நிலத்திற்கு அருகில் உள்ள நிலவியல் பாதை எந்த எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்றால் எனக்கு தெரியாது.

15. மேற்படி நிலவியல் பாதை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பிர்கா சர்வேயரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

16. எனக்கு பாத்தியப்பட்ட நிலங்களுக்கு அருகில் உள்ள நிலங்கள் பற்றி தெரியாது என்பதாலும், அவற்றிற்குரிய புல வரைபடங்களை நான் பார்க்கவில்லை என்பதாலும், தாவா பாதை பற்றிய எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

17. தாவா பாதை சம்பந்தமாக நீண்ட நாட்களாக பிரச்சனை இருந்துவருகிறதா என்றால் பிரதிவாதி சொத்து வாங்கிய நாளில் இருந்து பிரச்சனை இருந்து வருகிறது.

18. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**